Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 30 /2025**

Preliminary Register

Deposition of **PW- 1 LW -1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | பாப்பைய்யன் | Father Name | : | பெரம்பன் |
| Village | : | ஓலயமங்களம் | Taluk | : | குடவாசல் |
| Caste | : | | Calling | : | விவசாயம் |
| Religion | : | | Age | : | 68 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of October 2025.

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

**முதல் விசாரணை-**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். இந்த வருடத்தில் சித்திரை மாதத்திற்கு முன்பு ஒரு நாள் எனது மாட்டிற்கு உடல் நிலை சரியில்லாததால் மருந்து வாங்குவதற்காக ஓலயமங்கலத்திலிருந்து சைக்கிளில் கொலக்குடி வழியாக தொழுவூர் வந்தேன். தொழுவூர் ரோட்டில் ஒரு ஓரத்தில் சைக்கிளை நிறுத்திவிட்டு வெற்றிலை பாக்கு போட்டுவிட்டு சிறுநீர் கழித்துவிட்டு செல்லலாம் என்று சைக்கிளை நிறுத்தும் போது எங்கிருந்துதான் வந்தது என்று தெரியவில்லை ஒரு வேன் என்மீது மோதியது. வேன் மோதியதில் எனக்கு உடலில் அடிபட்டுவிட்டது எனக்கு வலது பக்க விலாவில் எலும்பு முறிவு ஏற்பட்டது வயிற்றிலும் காயம் ஏற்பட்டது ( சாட்சி தனக்கு வலது பக்க விலாவில் ஏற்பட்ட எலும்பு

முறிவு காயத்தினையும் மருத்துவமனையில் வயிற்றில் ஏற்பட்ட காயத்திற்காக போடப்பட்ட தையலையும் நீதிமன்றத்தின் முன்பு அடையாளம் காட்டினார்) எனக்கு மேற்கண்ட காயத்திற்காக தஞ்சாவூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. நான் மேற்படி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது வலங்கைமான் போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். போலீசாரிடம் நடந்த விபத்துக்குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் நான் எனது இடது கை பெரு விரல் ரேகை பதித்தேன் (புகார் வாக்குமூலம் **அ.சா.ஆ.1 ஆக** குறியீடு செய்யப்படுகிறது) போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் ரேகை வைத்ததாக சொல்லும் பேப்பரில் என்ன எழுதியிருந்தது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். ஓலயமங்களத்திலிருந்து தொழுவூர் செல்லும் சாலை கிழக்கு மேற்கான சாலை என்றால் சரிதான். வலங்கைமானிலிருந்து நீடாமங்களம் செல்லும் சாலை வடக்கு தெற்கான சாலை என்றால் சரிதான். நான் விபத்து நடந்ததாக சொல்லும் இடம் இரண்டு ரோடுகளும் சேரும் இடம் என்றால் சரிதான். நான் வலங்கைமான் செல்லவேண்டும் என்றால் சம்பவம் நடந்த இடத்திலிருந்து வட புறமாக திரும்பிதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். பொதுவாக கிழக்கு மேற்கான ரோட்டில் வடபுறமாக திரும்பி செல்லவேண்டும் என்றால் ரோட்டை குறுக்காக கடந்துதான் செல்லவேண்டும் என்றால் சரிதான். நான் கிழக்கிலிருந்து மேற்காக வந்து வலங்கைமான் செல்ல வடபுறமாக ரோட்டை குறுக்காக கவனமின்றி கடக்கும்போது இவ்விபத்து ஏற்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. இவ்விபத்துக்கு நான்தான் காரணம் என்றால் சரியல்ல. பொதுவாக விபத்துக்கு தான்தான் காரணம் என்று சொன்னால் இழப்பீடு பெறமுடியாது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என்னை முதன்முதலில் வலங்கைமான் அரசு மருத்துவமனையில்தான் முதலுதவி சிகிச்சைக்காக சேர்த்தார்கள் என்றாலும் பின்னர் கும்பகோணம் அரசு மருத்துவமனையில்

சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. இவ்விபத்துக்கு நான்தான் காரணம் என்றாலும் இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காகவும் தகுந்த சட்ட ஆலோசனை பெற்று எதிரி மீது பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN
Digitally signed by JESU BALAN
Date: 2025.10.13 17:10:12 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,
வலங்கைமான்.

Crl.Misc/39

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE VALANGAIMAN

Calendar

Miscellaneous **Case No. CC. 30/2025**

Preliminary Register

Deposition of **PW- 2 LW-2**

| Name | : | தனுஸ்கோடி | Father Name | : | பாப்பைய்யன் |
|---|---|---|---|---|---|
| Village | : | ஓலயமங்களம் | Taluk | : | குடவாசல் |
| Caste | : | | Calling | : | கூலிவேலை |
| Religion | : | | Age | : | 40 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of 13th day of October 2025.

எதிரி ஆஜர் . எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலை.

<u>**முதல் விசாரணை-**</u>

நான் மேற்படி முகவரியில் வசித்து கூலிவேலை செய்து வருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். இன்றிலிருந்து 4, 5 மாதங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலைக்கு சென்றிருந்தேன். அன்றையதினம் எனது அப்பா ஓலயமங்களத்திலிருந்து மாட்டிற்கு மருந்து வாங்குவதற்காக சைக்கிளில் வலங்கைமான் மாட்டு ஆஸ்பத்திரிக்கு வந்தார். அன்றையதினம் காலை 09.30 மணியளவில் எனக்கு தெரிந்த ஒருவர் எனக்கு போன் செய்து எனது அப்பா அடிபட்டு கிடப்பதாகவும் எங்கு இருக்கிறேன் என்றும் கேட்டார். எனக்கு தகவல் சொன்ன நபரிடம் விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று கேட்டபோது அவர் தொழுவூர் பேருந்து நிறுத்தம் முனையில் நடந்ததாக சொன்னார். நான் உடனே விபத்து நடந்த

இடத்திற்கு வந்து பார்த்தபோது விபத்து ஏற்படுத்திய காரும் அப்பாவும் அங்கு இல்லை. அப்பாவின் சைக்கிள் மட்டும் இருந்தது. நான் வலங்கைமான் அரசு மருத்துவமனையில் சென்று எனது அப்பாவை பார்த்தேன். அவர் பேசமுடியாமல் மயக்க நிலையில் இருந்தார். நான் அவரை விசாரித்தேன். அங்கு இருந்தவர்கள் தொழுவூர் பாலிடெக்னிக்கிள் வேலை செய்யும் சார் தான் காரில் வந்து மோதியதாக சொன்னார்கள். நான் பார்த்தபோது தொழுவூர் பாலிடெக்னிக்கில் வேலை செய்யும் 7, 8 சார்கள் வலங்கைமான் மருத்துவமனையில் இருந்தார்கள். அவர்களிடம் விபத்தை ஏற்படுத்திய கார் எங்கே என்று கேட்டேன் அவர்கள் இருப்பதாக சொன்னார்கள் ஆனால் எங்கு உள்ளது என்று சொல்லவில்லை, காரை ஓட்டிய டிரைவர் எங்கு என்று கேட்டேன் அவரும் இருக்கிறார் என்று சொன்னார்கள் அதற்குள் அங்கு போலீசார் வந்துவிட்டார்கள். வலங்கைமான் மருத்துவமனையிலிருந்து கும்பகோணம் அரசு மருத்துவமனைக்கு எனது அப்பாவை அனுப்பி வைத்தார்கள். அங்கிருந்து மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். விபத்தினால் எனது அப்பாவுக்கு தலையிலும் வலது பக்க விலாவில் எலும்பு முறிவும் ஏற்பட்டிருந்தது. இதயத்தில் இரத்தகட்டு ஏற்பட்டிருப்பதாக மருத்துவர்கள் சொன்னார்கள். போலீசாரிடம் எனது அப்பா நடந்த விபத்துக் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்தார். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -**

நான் எனது முதல் விசாரணையில் கூறியுள்ள, "அவர் பேசமுடியாமல் மயக்க நிலையில் இருந்தார். நான் அவரை விசாரித்தேன். அங்கு இருந்தவர்கள் தொழுவூர் பாலிடெக்னிக்கிள் வேலை செய்யும் சார் தான் காரில் வந்து மோதியதாக சொன்னார்கள். நான் பார்த்தபோது தொழுவூர் பாலிடெக்னிக்கில் வேலை செய்யும் 7, 8 சார்கள் வலங்கைமான் மருத்துவமனையில் இருந்தார்கள். அவர்களிடம் விபத்தை ஏற்படுத்திய கார் எங்கே என்று கேட்டேன் அவர்கள் இருப்பதாக சொன்னார்கள் ஆனால் எங்கு உள்ளது என்று சொல்லவில்லை, காரை ஓட்டிய டிரைவர் எங்கு

என்று கேட்டேன் அவரும் இருக்கிறார் என்று சொன்னார்கள் அதற்குள் அங்கு போலீசார் வந்துவிட்டார்கள்." என்று போலீசார் விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான், போலீசார் என்னை விசாரிக்கவில்லை. காயம்பட்ட நபர் எனது அப்பா என்பதாலும் அவருக்கு இழப்பீடு கிடைக்கவேண்டும் என்பதாலும் வழக்கின் சம்பவம் குறித்து மிகைப்படுத்தி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை**

என்னால் சொல்லப்பட்டு என்னுடைய மேற்பார்வையில் என்னுடைய ஆணையின் கீழ் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு விளக்கப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

JESU BALAN

Digitally signed by JESU BALAN
Date: 2025.10.13 17:10:29 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர்,

வலங்கைமான்.